# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

**අංක 2498/76 - 2026 ජූලි මස 24 වැනි සිකුරාදා - 2026.07.24**

2498/76 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு யூலை மாதம் 24 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்

### சனாதிபதி சட்டத்தரணிகளை நியமித்தல் தொடர்பான வழிகாட்டி

சனா.அ.இல.:பிஎஸ்/சீஎஸ்ஏ/00/2/48 - Vol III

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 33(உ) உறுப்புரையின் கீழ் சனாதிபதிக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களை நடைமுறைப்படுத்தி சனாதிபதி சட்டத்தரணிகளை நியமிப்பதற்கான 2255/24 ஆம் இலக்க மற்றும் 2021 நவம்பர் மாதம் 24 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட வழிகாட்டிகளை பின்வருமாறு திருத்துவதற்கு கௌரவ சனாதிபதியவர்கள் பணிப்புரை விடுத்துள்ளார் என்பது இத்தால் அறிவிக்கப்படுகிறது.

கௌரவ சனாதிபதியவர்களின் ஆணைப்படி,

**கலாநிதி என்.எஸ். குமாநாயக்க,**
சனாதிபதியின் செயலாளர்.

சனாதிபதி அலுவலகம்,
கொழும்பு 01,
2026, யூலை 24.




*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## சனாதிபதி சட்டத்தரணிகளை நியமித்தல் தொடர்பான வழிகாட்டியை திருத்துதல்

02. 2255/24 ஆம் இலக்க மற்றும் 2021 நவம்பர் மாதம் 24 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட சனாதிபதி சட்டத்தரணிகளை நியமித்தல் தொடர்பான வழிகாட்டி இலக்கம் 04 நீக்கப்பட்டு பின்வரும் பிரிவு பதிலீடு செய்யப்படுகிறது.

> "04. அவர் குறைந்தபட்சம் இருபது (20) வருட காலங்கள் இலங்கை உயர்நீதிமன்ற சட்டத்தரணி ஒருவராகப் பணியாற்றியிராவிட்டால் சனாதிபதி சட்டத்தரணியொருவராக நியமிக்கப்படலாகாது."

EOG 07 - 0370

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.